செ.வெ.எண்: 14 நாள்: 06.03.2017

# பத்திரிகைச்செய்தி

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில், 2016-17-ஆம் ஆண்டுக்கு புதுக்கோட்டை மாவட்ட அளவில் அரசு பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் புதுக்கோட்டை விளையாட்டரங்கத்தில் 15.03.2017 அன்று காலை 9.00 மணி முதல் கீழ்க்கண்டுள்ள நிகழ்வுகளில் நடத்தப்படவுள்ளது.

தடகளம் - ஆடவர் - 100மீ, 200மீ, 800மீ, 1500மீ, நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், குண்டு எறிதல் மற்றும் 4x100மீ தொடர் ஓட்டம் - மகளிர் - 100மீ, 200மீ, 400மீ, 800மீ, நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், குண்டு எறிதல் மற்றும் 4x100மீ தொடர் ஓட்டம், இறகுப்பந்து- ஆடவர் மற்றும் மகளிர், கூடைப்பந்து - ஆடவர் மற்றும் மகளிர், கால்பந்து- ஆடவர் மட்டும், டென்னிஸ்-ஆடவர் மற்றும் மகளிர், கபாடி - ஆடவர் மற்றும் மகளிர்,மேசைப்பந்து-ஆடவர் மற்றும் மகளிர்,கையுந்துபந்து-ஆடவர் மற்றும் மகளிர்.

**போட்டிகளில் கலந்து கொள்வதற்கான தகுதிகள்:** அரசுத்துறை அலுலவகங்களில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களும் போட்டிகளில் கலந்து கொள்ளலாம், காவல்துறையில் பணிபுரியும் அமைச்சுப் பணியாளர்கள் மட்டும் போட்டிகளில் கலந்து கொள்ளலாம், அரசுப் பள்ளியில் பணிபுரியும் உடற்கல்வி ஆசிரிய/ஆசிரியைகள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம், சீருடைப் பணியாளர்கள் இப்போட்டியில் பங்கு பெற அனுமதியில்லை, அரசு சார்பு/தன்னாட்சி நிறுவன பணியாளர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள இயலாது, தற்செயல்/தினக்கூலி/தற்காலிக பணியாளர்கள்/தொழில்முறை பணியாளர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள இயலாது, புதிதாக பணியில் சேர்ந்து 6 மாத பணிக்காலம் முடிக்காத நிரந்தரப் பணியாளர்கள் போட்டிகளில் பங்கேற்க இயலாது, போட்டிகளில் கலந்து கொள்ள வயது வரம்பு கிடையாது, மாவட்ட மற்றும் மாநில அளவிலான அரசுப் பணியாளர் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் அனைத்துப் பணியாளர்களுக்கும் சிறப்பு தற்செயல் விடுப்பு, பயணப்படி மற்றும் தினப்படி ஆகியவைகள் சம்பந்தப்பட்ட துறை மூலம் வழங்கப்படுதல் வேண்டும் என அரசாணை(நிலை) எண்.93 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் (எஸ்1)துறை நாள் 27.11.2013-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

குழு விளையாட்டுப் போட்டிகளில் ஒருவர் ஒரு குழு விளையாட்டில் மட்டுமே கலந்து கொள்ள இயலும். தடகள விளையாட்டில் ஒருவர் தொடர் ஓட்டம் தவிர, ஒரு நிகழ்வில்(event) கலந்து கொள்ளலாம். மாவட்ட அளவிலான போட்டிகளில் குழு விளையாட்டில் முதலிடம் பெறும் அணி/ தடகள விளையாட்டில் முதலிடம் பெறுபவர்கள் மாநில அளவிலான போட்டிகளில் தவறாது கலந்து கொள்ள வேண்டும். மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்பவர்களுக்கு சீருடைகள் வழங்கப்படும்.

போட்டிகளில் கலந்து கொள்ள விருப்பமுள்ள அரசுப் பணியாளர்கள், தாங்கள் பணிபுரியும் துறைத் தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட, பணிபுரிவதற்குரியச் சான்றுடன் 15.03.2017 அன்று காலை 8.30 மணிக்கு விளையாட்டரங்கத்தில் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்அலுவலர் அவர்களிடம் தங்களது பெயரினை பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**